# எனது இசை உலக அனுபவங்கள்

சங்கீத கலாநிதி செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யர்

★

கடந்த காலங்களில் குருகுலவாஸம் செய்து, குருவின் அனுக்ரஹம் பெற்று, இசைபயின்ற வித்வான்கள் பெரும்பாலும் நல்ல க்யாதியுடன் பண்டித பாமர ரஞ்சகமாக இசை அரங்குகள் நடத்தி வந்தார்கள். இப்படி குருகுலவாஸம் செய்தவர்கள் குருவின் பார்வையிலேயே அவர்கள் கூடவே இருந்து கற்றுக் கொள்வதும், அவர்களின் ஸங்கீதத்தைக் கேட்பதும், அவர்களுடன் அரங்குகளில் கூடப் பாடியும் ரஸிக மஹா ஜனங்களிடம் அறிமுகம் செய்யப்பட்டுப் பெரிய நிலைக்கு வந்தார்கள். அவ்வகையில் குருகுலவாஸம் செய்து பயன்பட்டவர்களில் நானும் ஒருவன். எனது 8-வது வயதில் ஸங்கீதம் பயில ஆரம்பித்து 19-வது வயதில் மேடைகளில் கச்சேரிகள் செய்யத் தொடங்கி, கடந்த 48 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள எனது இசை உலக அனுபவங்களை விளக்க முன் வந்துள்ளேன்.

இன்று குருகுலவாஸம் என்பது அநேகமாக இல்லை என்றே கூறலாம். அதாவது சிஷ்யகுலவாஸம், அல்லது சிஷ்யக்ரஹப் பிரவேசம்தான் குருமார்களுக்கு என்ற நிலை.

முதன் முதலாக அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் இசைக் கல்லூரி தோன்றிற்று. அதில் பேராசிரியர்களாகப் பணியாற்றியவர்கள் மஹா வித்வான்களான ஸ்ரீ ஸபேசய்யர், ஸ்ரீ பொன்னய்யா பிள்ளை, ஸ்ரீ டைகர் வரதாச்சாரியார் முதலான பெரியவர்களும், வீணை வித்வான் தேசமங்கலம் ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர், வயலின் வித்வான் மதுரை ஸ்ரீ சுப்பிரமணிய அய்யர் அவர்களும் ஆசிரியர்களாக இருந்த காலத்தில் அங்கு பயின்றவர்கள் பழைய குருகுலவாஸமாகவே இருந்து, பயின்று வந்து முன்னுக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவர்தான் தற்காலம் ஸ்ரீ ஷண்முகானந்த ஸபையில் இசைக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றும் வீணை வித்வான் ஸங்கீத பூஷணம் ஸ்ரீ கே. எஸ். நாராயணஸ்வாமி அவர்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

முன் ஸம்பிரதாயப்படி குருகுலவாஸம் இந்நாளில் செய்வது சிரமமான காரியம்தான். ஆனால் அண்ணாமலை சர்வகலாசாலையில் மஹா வித்வான்கள் ஸ்ரீ சபேச அய்யர், ஸ்ரீ பொன்னையா பிள்ளை, ஸ்ரீ டைரக்டர் வரதாச்சாரியார் அவர்கள் போன்றவர்கள், குருகுலத்துக்கு நிகராகவே நடத்தி வந்த முறையில், இன்றும் கல்லூரிகள் நடத்தப்படுமானால் சிறந்த கலைஞர்கள் உருவாகலாம் என்பதில் சந்தேகம் இல்லை.

தற்காலம் உள்ள இசைக்கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு, ஓரளவிற்கு சங்கீதத்தைக் கேட்பதற்குள்ள ஞானமும் சங்கீதத்தை மேலே படிப்பதற்குள்ள ஞானமும் மட்டும் கிடைக்கும் என்று சொல்லலாம்.

கல்லூரிகளில் பி.ஏ. பாஸ் பண்ணியவர்கள் மேல் ஆராய்ச்சி செய்து பி.எச்.டி., முதலிய பட்டங்கள் பெறுவதற்கு அந்தந்த துறையில் ஒரு மேதாவிலாஸம் பொருந்திய பேராசிரியரிடம் சீடனாக இருந்து பலன் அடைவதுபோல் சங்கீதத்திலும் இதற்கு மேல் படிப்பவர்கள் சரியான குருவைத்தேடி அவர்களிடம் apprenticeship செய்து சங்கீதக் கலையின் நுட்பங்களை நன்றாக அறிந்து கொண்டால் இசை உலகில் நல்ல நிலைமைக்கு வருவதற்கு வாய்ப்புகள் இருப்பதை எனது அனுபவத்தில் கண்டுள்ளேன்.

அதற்குப் பிறகு திருவனந்தபுரத்தில் ஸ்ரீ ஸ்வாதித்திருநாள் ஸங்கீத கலாசாலையும், சென்னையில் ஸங்கீத கலாநிதி ஸ்ரீ முசிரி சுப்பிர

மணிய அய்யர் தலைமையில் கர்னுடக இசைக் கல்லூரியும் தோன்றின. திருவனந்தபுரம் ஸ்ரீ ஸ்வாதித் திருநாள் இசைக் கல்லூரியில் காலஞ் சென்ற காயக சிகாமணி டாக்டர் முத்தையா பாகவதர் அவர்களுக்குப் பிறகு என்னை முதல் வராக இருந்து பணியாற்ற நியமித்த பிறகு நான் ஒருவாறு பயனடைந்தேன் என்றே கூற வேண்டும். அதாவது ஸமீப காலமாக ஸங்கீ தத்தில் (அனுபவ லக்ஷ்யம்) பாடுபவர்கள் வேறு சங்கீத சாஸ்திரம் தெரிந்தவர்கள் வேறு என்ற நிலை வந்துவிட்டது. அந்த நிலையில் நான் ஒரு பாடகனுகத்தான் அக்கல்லூரியில் பதவி ஏற்றேன். ஆனுல் சாஸ்திர ஆராய்ச்சியும் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமும் ஏற் பட்டதில் நான் பயனடைந்தேன்.

எனது சிஷ்யகுலவாஸ அனுபவத்தில் கண்ட சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். தற் காலம் சங்கீதம் பயில (ஆண்கள்) மாணவர்கள் வருவதே குறைந்து விட்டது. அப்படி சிலர் வந்தாலும் அவர்களுக்கு நல்ல சிரத்தை இருப்ப தாகக் காணவில்லை.

ஆனுல் பெண்மணிகள் ஆசையுடன் ஸங்கீதம் பயில வருகிறுர்கள். நல்ல சாரீர வசதியுடன் நன்ருகப் பாடுகிறுர்கள். அவர்களுக்குப் பாடம் சொல்வதும் சிரமமே இல்லை. 2 தடவைகள் சொன்னுல் போதும், உடன் பிடித்துக் கொள்ளு கிருர்கள். வருங்காலத்தில் இசைக்கலை பெண் குலத்திற்கே என்று ஆகிவிட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை என்று தோன்றுகிறது.

ஆனுலும் ஆண்கள் ஸங்கீதம் பயில்வது மிக வும் அவசியம் என்பதைக் கூருமல் இருக்க முடியாது. புருஷர்கள் நன்கு கலையைப் பயின்று சாரீரத்தைப் பண்படுத்தி ஸாதகம் செய்து வித்வத்திறமையுடன் பாடினுல் அதன் ருசியே வேறுதான்.

முக்கியமாக தென் தேசத்தில் குரல் பயிற் சிக்கு முக்யத்வம் கொடுக்கப் படவில்லை என்பதையும் கூருமலிருக்க முடியாது. (அதா வது வாய்ஸ் கல்ச்சர்). அதற்கான பயிற்சி முறையை வடதேசத்து இசைக்கலைஞர்கள் மூலம் இசைக் கல்லூரிகளில் செய்விப்பது நலமாக இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

இசைப் பயிற்சி முறை : தக்ஷிணதேசத்தில், வீணை வாத்யப் பயிற்சிக்கான முறைதான் அநுபவத்தில் இருந்து வருகிறது. எந்த இசை நூலை எடுத்தாலும் வீணை போதன முறையைத் தான் கூறப்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களில் ஸங்கீதத்தில் நல்ல வாஸனுபலம் உள்ள மாணுக்கர்களுக்குத்தான் ஸங்கீதம் கற்றுக் கொடுக்க அக்காலத்தில் இருந்த குருமார்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள். ஆனுல் இன்றைய நிலையே வேறு. இசைக் கல்லூரிகளில் பலதரப் பட்டவர்களுக்கும் ஸங்கீதம் கற்றுக்கொடுக்க வேண்டிய நிலை வந்துள்ளது.

ஆதலால் வாய்ப்பாட்டுச் சொல்லி வைக்கும் முறையை சிறிது மாற்றி அமைத்துக் கொள்வது பலன் தரக்கூடும் என்பது எனது அனுபவ பூர்வமான நம்பிக்கை.

அதாவது, ஆரம்ப பயிற்சிக்கு மாயாமாளவ கௌள ராகத்திற்குப் பதிலாக, ஸ்வரஸ்தானங் களுக்குள்ள இடைவெளி கூடுதலாக இருக்கும் சங்கராபரண ராகத்தை வாய்ப்பாட்டுப் பயிற் சிக்கு எடுத்துக் கொள்வது ஸுலபமாக இருக் கும் என்பது எனது அனுபவ பூர்வமான கருத்து. இந்த சங்கராபரண ராகத்தை வட தேச சங்கீதம் போதிப்பதற்கு (பிலாவல் என்று பெயருள்ளது) வைத்துக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. மேல்நாட்டு இசையிலும் (மேஜர் நோட்ஸ்) இந்த சங்கராபரண ராகத்தைத் தான் பிரதானமாக வைத்துக் கொண்டிருக்கிருர்கள்.

நமது சங்கீதம் பரமசிவனின் ஐந்து முகங்களி லிருந்து ஸப்த ஸ்வரங்களும், ஸாமவேதத்தி லிருந்தும் தோன்றியதாகவும் இசைநூல்கள் மூலமாகவும், ஸத்குரு த்யாகப்ரம்மம் பாடியரு ளியுள்ள "நாத தனும் அனிசம் சங்கரம்" கீர்த்தனை மூலமாகவும் காண்கிருேம். அதாவது தற்காலத்தில் கரஹரப்ரியா என்று வழங்கும் ராகத்தில் வரப்படும் ஸ்வரஸ்தானங்கள் தான் ஸாமகானத்தில் வருவதைக் காண்கிருேம்.

அசைவுகளே இல்லாமல் சுத்த ஸ்வரமாகப் பாடினுலும் கரஹரப்ரியா ராகம் ஸ்புரிக்கும். ஆனதால் இந்த கரஹரப்ரியா ராகத்தையும் ஆரம்பப் பயிற்சிக்கு வைத்துக் கொள்ளலா மெனக் கருதுகிறேன்.

வருங்காலத்தில் தனிப்பட்ட முறையில் பழைய கால குருகுலவாஸம் போல் பெண்களுக்கும், புருஷர்களுக்கும், தனித்தனியாக குருகுலம் தனியாரின் முயற்சியில் நல்ல தேர்ந்த வித்வான்களையும், விதூஷிகளையும் ஆசிரியர்களாகக் கொண்டு ஹாஸ்டல் முதலான வசதிகளுடன் நடத்த முன்வந்தால், அதிலும் ஒரு வகுப்புக்கு 5லிருந்து 7 வித்யார்த்திகளை தகுதியுள்ளவர்களாகச் சேர்த்து 5 அல்லது 6 வருஷ காலம் பயிற்சி அளித்தால், நல்ல இசைக் கலைஞர்களை உருவாக்கலாம்.

*With best compliments*
*from*

MURALI ART PRESS
**QUALITY COLOUR PRINTERS**
17, YOGAMBAL STREET,
**T. Nagar, MADRAS - 600017**

PHONE :
441795